## தலைவர் கலைஞரிடம் கற்றுக்கொண்ட பாடம்



‘இவ்வளவு நேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்திருக்கிறீர்களே, சற்று ஓய்வெடுக்கலாமே’ என்று கழகத் தலைமை நிர்வாகிகளும், விருப்பமனு அளித்தவர்களும் தெரிவித்தார்கள். ஓய்வைவிட உழைப்புதான் உற்சாகத்துடன் தொடர்ந்து இயங்கச் செய்கிறது.

உடன்பிறப்புகளின் முகம் பார்த்தே அவர்களின் மன ஓட்டத்தை அறியும் உணர்வை நம் உயிர்நிகர் தலைவர் கற்றுத் தந்திருக்கிறார். நேர்காணலுக்காக அறிவாலயத்திற்கு வந்த உடன்பிறப்புகளைப் பார்த்தபோது, அவர்களுடைய தொகுதிகளைச் சார்ந்த, அறிவாலயம் பக்கமே வந்திராத கழகத்தின் ஆணிவேரான தொண்டர்களின் முகங்களும் என் மனதில் தோன்றின. தலைவர் முதல் தொண்டர் வரை அத்தனை பேரிடமும் ஒரே உணர்வு கொண்ட இயக்கம்தானே நம் திராவிட முன்னேற்றக் கழகம்.

- முதல்வர் மு.க.ஸ்டாலின்

## உடன்பிறப்புகளுடன் உற்சாகத்துடன் நேர்காணல்



மார்ச் 17 தொடங்கி, முதல்நாள் புதுச்சேரி, இரண்டாவது நாள் தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களைச் சேர்ந்த 2,000 உடன்பிறப்புகளையும் 9 மணி நேரத்திற்கும் மேலாகச் சந்தித்து நேர்காணலை நடத்தினேன்.

அறிவாலயத்தில் திரண்டிருந்த உடன்பிறப்புகளின் ஆர்வமும், அவர்களிடம் காணப்பட்ட எழுச்சியும் என் களைப்பை விரட்டி, உற்சாகத்தை அளித்தது.

மூன்றாவது நாள், மேற்கு மாவட்டங்களைச் சேர்ந்த நிர்வாகிகளிடம் 52 தொகுதிகளுக்கான நேர்காணலை நடத்தி முடித்தேன்.

- முதல்வர் மு.க.ஸ்டாலின்



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று(20.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழக தலைமை நிலைய அலுவலக செயலாளர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, ரம்ஜான் பண்டிகையையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## தமிழ்நாடு vs டெல்லி என்பது நிரூபணம்!

# எதிர்க்கட்சியினர் டெல்லியில் முகாமிட்டிருப்பது மக்கள் நலனுக்காகவா?

தேர்தல் களத்தை எதிர்கொள்வதற்கான முடிவுகளைக்கூட டெல்லியே எடுக்கும் நிலை, இனி, டெல்லியின் முடிவே அவர்களது முடிவு!

### இவர்களிடம் தமிழ்நாடு சிக்கினால் என்ன ஆகும்?




தமிழ்நாடு VS டெல்லி என்பதை முன்வைத்துதான் இந்தத் தேர்தல் களம் என்று நாம் சொல்வதை நிரூபிப்பது போலவே, டெல்லியில் இருந்துதான் எல்லாம் முடிவு செய்யப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவரும் அவரது சகாக்களும் டெல்லியில் இருப்பது எதற்காக? தமிழ்நாட்டிற்கு வழங்கப்படாமல் வஞ்சிக்கப்படும் நிதியை வாங்கித் தருவதற்காகவா? தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படாமல் முடக்கப்பட்டிருக்கும் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்துவதற்காகவா? சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காகவா? இல்லை.. இல்லை.. இல்லவே இல்லை.

தேர்தல் களத்தைச் சந்திப்பதற்கே டெல்லியின் சம்மதம் வேண்டும் என்ற நிலையில் உள்ளவர்களின் கைகளில் தமிழ்நாடு சிக்கிக்கொண்டால் ஒவ்வொரு நாளும் என்ன பாடுபட வேண்டியிருக்கும் என்பதை உணர்ந்துள்ள தமிழ் மக்கள் ஒருபோதும் டெல்லியின் ஆதிக்கத்தையும், அதன் அடிமைக் கூட்டத்தையும் அனுமதிக்க மாட்டார்கள்.

சுயநலனுக்காகச் சொந்தக் கட்சியை அடமானம் வைத்ததுபோல, தமிழ்நாட்டையும் டெல்லியிடம் அடகு வைக்கத் தயங்காதவர்கள் அவர்கள்.

இனி எதிர்க்கட்சியினர் எடுக்கும் முடிவு என்பது டெல்லி எடுக்கும் முடிவுதான்!

- முதல்வர் மு.க.ஸ்டாலின்

## 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாட்டில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க

# முதலமைச்சர் எழுதியுள்ள கடிதத்தின் மீது உரிய நடவடிக்கை எடுப்பீர்!

## மக்களவையில் – முனைவர் கணபதி ப.ராஜ்குமார் வலியுறுத்தல்!



புதுடெல்லி, மார்ச் 21–

30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு குடி யுரிமை அல்லது நீண்ட கால விசா போன்ற நிரந்தர சட்டத் தீர்வுகளை வழங்க தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தின் மீது ஒன்றிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்களவையில் கோவை நாடாளு மன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் வலியுறுத்திவுள்ளார்.

1983 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் இனக்கலவரம் காரணமாக நீண்ட காலமாகத் தமிழ் நாட்டில் வசிக்கும் இலங்கைத் தமிழர்க ளின் மிகவும் பரிதாபகரமான நிலைமைகள் குறித்து ஒன்றிய பிரதமருக்கு ஒருவகையான விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன். ஒன்றிய அரசின் ஆதரவுடனும், ஒப்புதலுடனும் தமிழக அரசு தொடர்ந்து தங்குமிடம், வாழ்வாதாரம், கல்வி மற்றும் மருத்துவ வசதிகளை வழங்கி வருகிறது. தமிழகத்தில் தற்போது சுமார் 89,000 இலங்கைத் தமிழர்கள் வாழ்கின்றனர், அவர்களில் பெரும்பாலானோர் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இங்கு வசித்து வருகின்றனர். இவர்களில் 40 சதவீதம் பேர் இந்திய மண்ணில் பிறந்தவர்கள் சட்டப்படி வாழ்ந்தவர்கள், நிச்சயமற்ற தன்மை, குடியுரிமை அல்லது நீண்ட கால விசாக்கள் போன்ற நிரந்தர சட்ட தீர்வுகளை அவர்களால் இன்னும் பெற முடிய வில்லை. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண, தமிழக அரசு, இலங்கை தமிழர்களின் நிலை குறித்து விரிவான ஆய்வு நடத்த, புலம்பெயர்ந்த தமிழர் நலத்துறை அமைச்சர் தலைமையில் ஒரு ஆலோ சனைக் குழுவை அமைத்து,

30.6.1987க்கு முன் இந்தியாவில் பிறந்தவர்கள், தாய், தந்தை இந்தியராக இருப்பவர்கள், இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த குடி யுரிமை பெற்றவர்கள் என பல்வேறு பிரிவுகளை சேர்ந்த இலங்கை தமிழர்களுக்கு பரிந்துரை செய்தது. மேலும், குடிவரவு மற்றும் வெளிநாட்டினர் (விலக்கு) சட்டத்தில் சமீபத்திய கொள்கை முன்னேற்றங்கள்,

ஒரு மனிதாபிமான அணுகுமுறை. எனவே, 09.01.2015 வரை இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள இலங்கைத் தமிழர்களை சட்ட விரோதக் குடியேறிகளாகக் கருதக் கூடாது என்று ஒன்றிய அரசு முறையான விளக்கம் அளிக்க வேண்டும். இந்த தெளிவுபடுத்தல் மிகவும் தேவையான சட்டத் தெளிவை வழங்குவதோடு, இலங்கைத் தமிழர்களுக்கான நீண்ட கால சட்ட தீர்வையும் உறுதி செய்யும். மேலும், இலங்கைத் தமிழர்களின் குடியுரிமை விண்ணப்பங் களை பரிசீலிப்பதைத் தடுக்கும் முந்தைய நிறைவேற்று ஆணையை ரத்து செய்ய வேண்டும். இது தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தில் நீண்ட காலமாக வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க நிரந்தர நடவடிக்கை எடுக்கக் கோரி ஒன்றிய பிரத மருக்கு கடிதம் எழுதியுள்ளார். எனவே, 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை அல்லது நீண்ட கால விசா போன்ற நிரந்தர சட்டத் தீர்வுகளை வழங்க தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டா லின் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தின் மீது ஒன்றிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்களவையில் கோவை நாடாளு மன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் வலியுறுத்திவுள்ளார்.

## தமிழ்நாடு தலை குனியாது!

# ஓ.பன்னீர்செல்வம் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



### மாவட்டக் கழகச் செயலாளர் அறிவிப்பு!

| தேதி | நேரம் | தொகுதி | ஒன்றிய/ நகர/ பேரூர் | இடம் |
|---|---|---|---|---|
| மார்ச். 22 | காலை 9.00 மணி | மானாமதுரை (தனி) | இளையான்குடி ஒன்றியம் | எம்.ஜி.எஸ்.மஹால், புதுக்குடி, இளையான்குடி |
| மார்ச்.22 | மாலை 4.00 மணி | சோழவந்தான் (தனி) | மதுரை ஒன்றியம் | சோழவந்தான் |
| மார்ச். 24 | இரவு 7.00 மணி | கம்பம் | உத்தமபாளையம் ஒன்றியம் கம்பம் நகரம் | கவிதா தாமோதரன் மண்டபம், சின்னமனூர் |
| மார்ச். 24 | மாலை 4.00 மணி | பெரியகுளம் (தனி) | பெரியகுளம் ஒன்றியம். தேனி நகரம், தென்கரை பேரூர் | தேனி |
| மார்ச்.24 | இரவு 7.00 மணி | போடிநாயக்கனூர் | சின்னமனூர், தேனி ஆகிய ஒன்றியங்கள் பழனிசெட்டிபட்டி, பூதிப்புரம், மார்கேயன்கோட்டை ஆகிய பேரூர்கள் | போடிநாயக்கனூர் |

இவண்

**சிவகங்கை மாவட்டச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன், மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் பி.மூர்த்தி, தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க.தமிழ்ச்செல்வன், தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன்**



விருதுநகர் வடக்கு மாவட்டம் சார்பில் பொதுக் குழுக் கூட்டம் மல்லாங்கிணர் ராஜாமணி திருமண மண்டபத்தில் அவைத் தலைவர் தங்கராஜ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு சட்டமன்றத் தேர்தல் 2026ல் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைத்திட ஆற்ற வேண்டிய களப்பணிகள் குறித்து உரையாற்றினார். உடன் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், வர்த்தக அணி அமைப்பாளர் வனராஜ், சிவகாசி மேயர் சங்கீதா இன்பம், சிவகாசி மாநகரச் செயலாளர் உதயசூரியன், விருதுநகர் நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், திருச்சுழி ஒன்றியச் செயலாளர் பொன்னுத்தம்பி, மாவட்ட பொருளாளர் வேலுச்சாமி, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய நகரச் செயலாளர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், தி.மு.க.வின் பல்வேறு அணி அமைப்பாளர்கள், மகளிர் அணி போன்ற 1000 கற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சிறப்புரையாற்றினார். மேடையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ரூசோ ஆகியோர் உள்ளனர்.